குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.182/2013

அ.சா.4

2024–ம் ஆண்டு அக்டோபர் 24–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெற்றி | ஜாதி | |
| தந்தை பெயர் | கந்தசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.14 மணி,

Accused A2.Subramani Present. A1.Ramasami died and charge abated. Advocate Mr.K.Sivakumar present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் பாரக்கல்லூரில் குடியிருந்து, கேபிள் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1–ஐ தெரியும். சுமார் 11 வருடங்களுக்கு முன்பு, வெங்கடேஷ் என்பவர் அவருக்கு சொந்தமான லாரியை எங்கள் ஊரில் உள்ள சமயபுரத்து மாரியம்மன் கோவில் அருகே நிறுத்தியிருந்தார். மறுநாள் காலை பார்த்தபோது அந்த இடத்தில் நிறுத்தியிருந்த லாரி இல்லை என்று வெங்கடேஷ் சொன்னார். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. லாரி திருடுபோனது தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், வெங்கடேஷ் என்பவர் தான் எனக்கு தகவல் கொடுத்தார் என்றாலும், சரி. வெங்கடேஷ் எனது பக்கத்து வீட்டுக்காரர். மேற்படி வெங்கடேஷ் ஒரு லாரி தான் வைத்துள்ளார். மேற்படி வெங்கடேஷ் தினமும் எனது வீட்டிற்கு அருகில் லாரியை எடுத்து வந்து நிறுத்துவார் என்றால் சரியல்ல. லோடு ஏற்றிவிட்டு திரும்பி வரும்போது, லாரியை அங்கு நிறுத்துவார். சம்பவம் நடந்த அன்று இரவு வெங்கடேஷ் லாரியை சம்பவ

இடத்தில் நிறுத்தியிருந்தாரா என்று எனக்கு தெரியவில்லை. அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிலிருந்து மாரியம்மன் கோயிலுக்கு சுமார் 200 மீட்டர் இருக்கும்.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.19 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.